In the Court of the Principal District Judge, Vellore District.

Deposition of Witness for P.W.1

S.C.No.138/2017

| | | |
|---|---|---|
| Name | : | அலி அக்பர் |
| Father/Husband Name | : | மௌலானா |
| Village | : | ஆம்பூர் |
| Taluk | : | ஆம்பூர் |
| Caste | : | முஸ்லீம் |
| Calling/Occupation | : | ஓட்டுநர் |
| Religion | : | முஸ்லீம் மதம் |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.01.2021.

முதல் விசாரணை

நான் ஆம்பூர் வீட்டு வசதி வாரியத்தில் குடியிருந்து வருகிறேன். நான் லாரி டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். 26.07.2015ல் நான் எனது வீட்டில் இருந்தபோது, ஆம்பூர் அரசு மருத்துவமனையில் எனது சகலையின் மருமகன் சேர்க்கப்பட்டிருந்தார். அப்போது நான் அவரை அரசு மருத்துவமனைக்கு சென்று நான் அவரை பார்த்தேன். அப்போது அவர், என்னிடம் பள்ளிகொண்டா காவல் நிலையத்திலிருந்து வந்து அவரை அழைத்துச் சென்றதாகவும், காவல் நிலையத்தில் அவரை அடித்ததாகவும் கூறினார். அதன்பிறகு அவரை ஆம்பூர் அரசு மருத்துவமனையில் இருந்து, வேலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். பின்னிட்டு சென்னை அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கு அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனது சகலை கௌஸ் பாஷா மற்றும் ஜலால் ஆகியோர், மேற்படி நபர் இறந்தது பற்றி என்னிடம் சொன்னார்கள். அதன்பேரில் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த

புகார். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1 மற்றும் 6 எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை

நான் படிக்கவில்லை. நான் பள்ளிகொண்டா டவுன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அப்போது அங்கு காவல் ஆய்வாளர் இல்லை. மேற்படி நபர் இறந்த அன்று தான் நான் புகார் கொடுத்தேன். அ.சா.ஆ.1ஐ ஜலால் என்பவர் எழுதினார். அ.சா.ஆ.1ல் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. அ.சா.ஆ.1ல் 26.06.2015 என்று போட்டிருந்தார்கள். அ.சா.ஆ.1ல் தேதி எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1ல் நான் போட்டுள்ள கையெழுத்து அருகே தேதி எதுவும் நான் போடவில்லை என்றால் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் விசாரிக்கவில்லை. 26.06.2015க்கு அடுத்த நாள் என்னிடம் பள்ளிகொண்டா காவல் ஆய்வாளர் பொறுப்பு கோவிந்தசாமி என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்தார் என்றாலும், அதனை தற்போது நான் வழக்கிற்காக மறைக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. இதுசம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் வேறு எந்த புகாரும் கொடுக்கவில்லை. மேற்படி நபர் இறந்து போன செய்தி போன் மூலம் நான் கேள்விப்பட்டேன். நான் பள்ளிகொண்டா டவுன் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் 26.06.2015 தேதியிட்ட ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு கொடுக்கப்பட்டதாக உள்ள புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் எ.த.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் 26.06.2015 தேதியிட்ட ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு கொடுக்கப்பட்டதாக உள்ள புகார் ஜலால் என்பவரால் எழுதப்பட்டது. அந்த புகாரில் யாருடைய பெயரையும் குறிப்பிட்டு எதிரியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

அ.சா.ஆ.1ல் ஜலால் தனக்கு தெரிந்த, எனக்கு தெரியாத விஷயங்களை எழுதி, என்னிடம் கையெழுத்து வாங்கினார் என்றால் சரிதான். இறந்து போன நபரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றபோது நான் செல்லவில்லை. அதற்கு அடுத்த நாளும் நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. இறந்த நபரை எந்த தேதியில் நான் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தேன் என்று ஞாபகம் இல்லை. அதற்கு அடுத்த நாள் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் எதுவும் கேள்விப்படவில்லை. நான் அரசு மருத்துவமனையில் பார்த்த அன்று இறந்த நபர் நன்றாக பேசிக்கொண்டிருந்தார். எனது சகலப்பாடி கௌஸ்பாஷாவிற்கு, இறந்து போன நபர் மருமகன். இறந்து போன நபர் ஒரு பெண்ணை அழைத்துசென்றுவிட்டார் என்று தான் விசாரணைக்கு அவரை அழைத்ததாக நான் கேள்விப்பட்டேன். அந்த பெண் ஏற்கனவே திருமணமானவரா என்று எனக்கு தெரியாது. அதற்கு முன்பாக இறந்து போன நபருக்கு எனது சகலை தனது பெண்ணை திருமணம் செய்து வைத்திருந்தார். தனது மருமகன் மற்றொரு பெண்ணை அழைத்து சென்றுவிட்டார் என்று எனது சகலைபாடி கௌஸ்பாஷாவிற்கு, இறந்து போன நபர் மீது கோபம் இருந்தது என்றால் சரிதான். இறந்து போன நபரை காவல் நிலையத்திலிருந்து அழைத்து வந்தது யார் என்று எனக்கு தெரியாது. இறந்து போன நபரை, ஆம்பூர் அரசு மருத்துவமனையில் யார் சேர்த்தார்கள் என்று எனக்கு தெரியாது. என் மனைவி சொல்லி நான் போய் பார்த்தேன். வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாமல் நான் புகார் கொடுத்துள்ளேன் என்ற சொன்னால் சரியல்ல. இறந்து போன நபர், என்னிடம் காவல் நிலையத்தில் தன்னை அடித்ததாக என்னிடம் சொன்னபோது, நான் அவரிடம் அதன்பேரில் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தாரா என்று கேட்கவில்லை. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும்

தெரியாது என்றாலும், நான் நீதிமன்றத்தில் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2 முதல் 5 எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை

1 மற்றும் 6 எதிரிகளுக்கான குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.

மறுவிசாரணை இல்லை.

In the Court of the Principal District Judge, Vellore District.

Deposition of Witness for P.W.2

S.C.No.138/2017

| | |
|---|---|
| Name | : கௌஸ் பாஷா |
| Father/Husband Name | : N.M.கியாஸ் சுதின் |
| Village | : ஆம்பூர் |
| Taluk | : ஆம்பூர் |
| Caste | : முஸ்லீம் |
| Calling/Occupation | : ஓட்டுநர் |
| Religion | : முஸ்லீம் |
| Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.01.2021.

முதல் விசாரணை

நான் மூசாக்கொல்லை, ஆம்பூரில் குடியிருக்கிறேன். ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஷமில் பாஷா எனது மருமகன் ஆவார். 15.09.2014 அன்று ஷமில் பாஷாவுக்கும், எனது மகள் முஸ்தரி கஸிம் என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது. ஷமில் பாஷா ஆம்பூர் ஷீ கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். ஷமில் பாஷாவின் தகப்பனார் ஷாஜகான் ஈரோட்டில் மெக்கானிக்காக வேலை பார்த்து வருவதால், ஷமில் பாஷாவும், எனது மகளும் ஈரோட்டிற்கு சென்றுவிட்டார்கள். அதன்பிறகு ஷமில் பாஷா ஈரோட்டில் ஒரு மாதம் சென்னை சில்க்ஸில் வேலை பார்த்து வந்தார். அதன்பிறகு ஈரோட்டில் கல்யாண் ஜீவல்லர்ஸ்சில் 5 மாதங்கள் வேலை செய்தார். அப்போது எனது மாமியாரின் அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாததால் நாங்கள் ஷமில் பாஷாவுக்கு போன் செய்து, விஷயம் தெரிவித்தவுடன் அவர்கள் 16.06.2015 அன்று இங்கு வந்தார்கள். அதன்பிறகு

அவரது சகோதரி வீட்டிற்கு சென்றுவிட்டு, மீண்டும் ஊருக்கு ஒருநாள் கழித்து இங்கு வந்தார்கள். 16.06.2015 அன்று ஜமில் பாஷாவின் மாமா கலில் பாஷா எனது வீட்டிற்கு வந்து குச்சிபாளையத்தில் ஒரு பெண்ணை காணவில்லை என 15, 20 நபர்கள் வந்து சொன்னதாகவும், என்னை, எனது மருமகன் ஜமில் பாஷாவை அங்கு அனுப்பி வைக்கும்படியும் கூறினார். அதன்பிறகு ஜமில் பாஷாவை ஆம்பூர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றுவிட்டார்கள். 16.06.2015 அன்று காலை 11.30 மணியளவில் ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு சென்றேன். ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளர், பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் விசாரிக்கவேண்டும் என்று, அதனால் எங்களை போகச் சொன்னார். பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு நானும், இந்திய தௌஉறித் ஜமாத்தில் நகர செயலாளர் என்.எச்.ஜாகிர் அகமத் ஆகியோரும் சென்று ஜமில் பாஷாவை ஒப்படைப்பதாக கூறினோம். அப்போது ஆய்வாளர் மதியத்திற்கு மேல் வருவார் என்று சொல்லி எங்களை அங்கேயே காக்க வைத்தார்கள். அப்போது இரவு நேரம் ஆன பின் காவல் ஆய்வாளர் வராததால் எங்கள் அனைவரையும் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். 17.06.2015 மதியம் 03.00 மணியளவில் காவல் ஆய்வாளர் மார்ட்டின் பிரேம்ராஜ் (1வது எதிரி) வந்தார். அப்போது 1வது எதிரி, பெண் காணாமல் போன வழக்கு இது என்றும், விசாரணை செய்யவேண்டும் என்றும் கூறினார். அப்போது 1வது எதிரி, ஜமில் பாஷாவிடம் விசாரித்தார். ஜமில் பாஷா அந்த பெண் தன்னுடன் வேலை பார்த்ததால், அந்த பெண்ணை தெரியும் என்றும், அந்த பெண் ஈரோட்டிற்கு வந்ததாகவும் கூறினார். ஜமில் பாஷா, அந்த பெண்ணை ஆம்பூருக்கு செல்லும்படி அனுப்பி வைத்ததாக கூறினார். ஜமில் பாஷா குச்சிபாளையத்தில் உள்ள அந்த பெண் பவித்ராவின் அம்மாவிற்கு போன் செய்து, பவித்ரா அங்கு வருவதாக கூறியதாக கூறினார். அன்று இரவு வரை பவித்ரா வீட்டிற்கு வராததால், பவித்ராவின் கணவர் பழனி என்பவர்

ஷமில் பாஷாவிற்கு போன் செய்து மிரட்டியதாகவும், தகாத வார்த்தைகளால் அவரை திட்டியதாகவும் ஷமில் பாஷா கூறினார். அதனால் ஷமில் பாஷா அந்த சிம் கார்டை உடைத்துவிட்டதாக கூறினார். நானும், ஷாஜகானும் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருந்தபோது, 2 முதல் 4 எதிரிகள், ஷமில் பாஷாவை ஷீவால் மிதிக்கவும், அடிக்கவும் எத்தனித்தார்கள். 1வது எதிரி, ஷமில் பாஷாவிடம் விசாரணை செய்யவேண்டும் என்றும், அதன் காரணமாக எங்களை மட்டும் போகச்சொன்னார். அவர்கள் அன்று இரவு வரை ஷமில் பாஷாவை அனுப்பாததால் நாங்கள் மட்டும் வீட்டிற்கு சென்றோம். அடுத்த நாள் 18.06.2015 அன்று காலை கலில் பாயும், நானும், என் மகள் முஸ்தரி கஸிம் ஆகியோரும் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு ஷமில் பாஷா இல்லை. காவல் நிலையத்தில் பணிபுரியும் வேறு நபர்களிடம் விசாரித்தோம். ஷமில் பாஷாவை விசாரிக்கவேண்டும் என்று சொல்லி 1வது எதிரி, ஷமில் பாஷாவை அழைத்து சென்றதாக கூறினார்கள். அப்போது நான் உதவி ஆய்வாளர் ரவிக்கு போன் செய்தேன். அவர், தான் டிராவலில் இருப்பதாகவும், பிறகு போன் செய்கிறேன் என்ற சொல்லி போனை துண்டித்துவிட்டார். அதன்பிறகு நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். மறுநாள் 19.06.2015 அன்று கலில் பாய் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு சென்றார். கலில் பாஷா அங்கிருந்து எனக்கு போன் செய்து, 1வது எதிரியும், ஷமில் பாஷாவும் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருப்பதாகவும் எழுதிக்கொடுத்துவிட்டு ஷமில் பாஷாவை அழைத்து செல்லலாம் என்று என்னிடம் கூறினார். அப்போது நான் ஆம்பூர் எம்.சி. ரோடில் உள்ள தபால் நிலையத்தில் இருந்தேன். எஸ்.பி. மற்றும் டி.ஐ.ஜிக்கு, எனது மருமகனை காணவில்லை என மனு அனுப்புவதற்காக இருந்தேன். கலில் பாஷா போன் செய்ததால் நான் ஷாஜகானின் நண்பர் முரளி என்பவரை அழைத்துக் கொண்டு பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு 1வது எதிரி மற்றும் ஷமில்

பாஷா இருந்தார்கள். அப்போது ஷமில் பாஷாவின் இடது கை பாதி மட்டும் தூக்க முடிந்த நிலையிலும், வலது கை சுத்தமாக தூக்க முடியாமலும் இருந்தது. 1வது எதிரியிடம், நான் இதுப்பற்றி கேட்டபோது சுடுதண்ணியில் ஒடத்தடம் கொடுத்தால் சரியாகிவிடும் என்று சொன்னார். கேஸ் போட்டிருந்தால் 7 வருடம் தண்டனை அனுபவித்திருக்கவேண்டும் என்று 1வது எதிரி சொன்னார். எழுதிக்கொடுத்துவிட்டு ஷமில் பாஷாவை அழைத்துச் செல்லுங்கள் என்றும், பவித்ரா பற்றி தகவல் தெரிந்தால் தெரியப்படுத்துங்கள் என்று 1வது எதிரி சொன்னார். உதவி ஆய்வாளர் ரவி எழுதினார். நானும், முரளியும் அதில் கையெழுத்து செய்தோம். ஷமில் பாஷாவின் கை அடிப்பட்டு இருந்ததால் அவரது இடது கைபெருவிரல் ரேகையை வைத்துவிட்டு, அவரை அழைத்துக்கொண்டு நாங்கள் வந்தோம். அப்போது நாங்கள் வெளியே நின்றுக் கொண்டிருந்தபோது, 2வது எதிரி, ஷமில் பாஷாவின் செல்போனும், பர்சும் அந்த இடத்திலேயே விட்டுவிட்டு வந்துவிட்டார் என்று சொல்லி அதை எடுத்து தருவதாக சென்றார். நாங்கள் அதன்பிறகு பர்சும், செல்போனையும் தராததால் நாங்கள் பஸ்சில் ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு வந்தோம். நான் பஸ்சில் வரும்போது ஷமில் பாஷா போலிசார் அடித்ததால் விலா எலும்பிலும், மர்ம உறுப்பிலும் வலிப்பதாக கூறினார். நானும், இர்பான் அகமத் ஆகியோரும் சேர்ந்து ஷமில் பாஷாவை ஆம்பூர் அரசு மருத்துவமனையில் அட்மிட் செய்தோம். மறுநாள் காலை அவருக்கு ஸ்கேன் எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அப்போது நானும், ஜாகிர் அகமது, பி.யு.முகமது ஜலால் ஆகியோர் ஆம்பூர் நகர காவல் நிலையம் சென்று, ஷமில் பாஷாவை அடித்த விவரத்தை கூறினோம். அதற்கு ஆம்பூர் நகர காவல் ஆய்வாளர் தாங்களே ஷமில் பாஷாவை தேடிக்கொண்டு இருப்பதாக கூறினார். அப்போது நாங்கள் ஆம்பூர் நகர காவல் ஆய்வாளரை, ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று ஷமில்

பாஷா அடிப்பட்டு இருப்பதையும் சிகிச்சை பெற்று கொண்டு இருப்பதையும் காண்பித்தோம். அப்போது ஷமில் பாஷா சொன்ன விவரங்களை ஆம்பூர் நகர காவல் ஆய்வாளர் எழுதிக்கொண்டார். 22.06.2015 அன்று ஆம்பூர் அரசு மருத்துவமனையில் பரிந்துரை செய்ததின் பேரில் வேலூர் அரசு மருத்துவமனைக்கு ஷமில் பாஷாவை அனுப்பி வைத்தார்கள். அங்கு சி.டி.ஸ்கேன் எடுத்தார்கள். 25.06.2015 அன்று சி.டி. ஸ்கேன் ரிசல்ட்டை பார்த்துவிட்டு நரம்பு பிரச்சனை இருப்பதாகவும், அதனால் சென்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவேண்டும் என்றும் கூறினார்கள். அப்போது ஷாஜகான், அவரது மனைவி, மற்றும் எனது மகள் ஆகியோர்கள் ஷமில் பாஷாவை அழைத்துக் கொண்டு ஆம்புலன்சில் சென்னைக்கு சென்றார்கள். மறுநாள் காலை நான் சென்னை மருத்துவமனைக்கு சென்றேன். அப்போது ஷமில் பாஷாவிற்கு ஆக்சிஸன் பொருத்தப்பட்டிருந்தது. அன்று வெள்ளிக்கிழமை என்பதால் மண்ணடி பள்ளிவாசலுக்கு நானும், ஷாஜகானும் தொழுகைக்காக சென்றோம். மண்ணடி பள்ளி வாசலில் எஸ்.எம்.பாஉறர், மாநில தலைவர் இருந்தார். அவரிடம், விவரங்களை நாங்கள் கூறினோம். அவர் தான் வந்து பார்ப்பதாக கூறினார். எனது மகள் போன் செய்து, ஷமில் பாஷாவின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும், விரைவில் வருமாறும் கூறினார். அதற்கு முன்னரே நாங்கள் அங்கு சென்றோம். அன்றைய தினம் வாங்கு சொன்ன கொஞ்ச நேரத்தில் சுமார் 5.45 மணிக்கு ஷமில் பாஷா இறந்துவிட்டார். அதன்பிறகு நானும், எனது மகள், எனது மனைவி, ஷாஜகானின் மனைவி ஆகியோர் பஸ் ஏறி ஆம்பூருக்கு வந்துவிட்டோம். நான் அங்கு இல்லாததால், எனது சகலை அலி அக்பரை புகார் கொடுக்கச் சொன்னோம். மறுநாள் காலை, நான் சென்று, அலி அக்பர் லாரி ஓட்டுனர் என்பதால், நான் மறுபடியும் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார்

அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஜமில் பாஷா பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை ஜமில் பாஷா உடையது ஆகும். அந்த கைரேகை மட்டும் அ.சா.ஆ.3ஆக (எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன்) குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆவணத்தில் கீழே சாட்சி கையெழுத்திட்டுள்ள எனது கையெழுத்து உள்ளது. எனது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4ஆக (எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன்) குறியீடு செய்யப்படுகிறது. அதன்பேரில் 02.07.2015 அன்று சி.பி.சி.ஐ.டி. விசாரணை செய்தார்கள்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

பவித்ரா இன்னொருவரின் மனைவி. ஈரோட்டில் தனியாக ஒரு வீடு எடுத்து ஜமில் பாஷா, பவித்ராவை ஒருநாள் மட்டும் தங்க வைத்திருந்தார். பவித்ரா எந்த தேதியில் ஈரோடு சென்றார் என்று எனக்கு சொல்லப்படவில்லை. அ.சா.ஆ.2ல் பவித்ராவை எந்த விலாசத்தில் ஜமில் பாஷா தங்க வைத்திருந்தார் என்று நான் சொல்லவில்லை. 25.05.2015ல் பவித்ரா ஈரோடு வந்ததாக ஜமில் பாஷா, என்னிடம் கூறினார். பவித்ரா காணாமல் போனதாக சென்னை உயர்நீதிமன்றத்தில், ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆட்கொணர்வு மனு பற்றி நான் அ.சா.ஆ.2ல் ஒன்றும் சொல்லவில்லை. இதுசம்மந்தமாக பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். கலில்பாஷா எங்கள் வீட்டில் வந்து, 15, 20 நபர்கள் ஜமில் பாஷாவை தேடி வந்ததாக கூறியபோது நான் வீட்டில் இல்லை. எனது மனைவியும், மகளும், ஜமில் பாஷாவை 16.06.2015 அன்று கலில் பாஷாவுடன் அனுப்பி

வைத்தார்கள். 25.05.2015 முதல் 16.06.2015 வரையிலான இடைப்பட்ட காலத்தில் பவித்ராவின் நிலைமை பற்றி ஷமில் பாஷா, என்னிடம் எதுவும் சொல்லவில்லை. நானும் இதைப்பற்றி ஷமில் பாஷாவிடம் கேட்கவில்லை. அதைப்பற்றி நான் அ.சா.ஆ.2ல் எதுவும் கூறவில்லை. ஆம்பூர் காவல் நிலையத்திற்கு சென்ற பிறகு தான் எனக்கு பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் ஷமில் பாஷாவை, பவித்ரா வழக்கு சம்மந்தமாக தேடுகிறார்கள் என்று தெரியவந்தது. பவித்ரா வழக்கு சம்மந்தமாக ஷமில் பாஷாவை விசாரிக்கவேண்டிய கடமை பள்ளிகொண்டா காவல் நிலைய அதிகாரிகளுக்கு உள்ளது என்றால் சரிதான். 26.06.2015 அன்று ஷமில் பாஷா இறந்துவிட்டார். அவர் இறந்து போன சமயம் சென்னை மருத்துவமனையில் நான் இருந்தேன். அன்று இரவு 3 மணிக்கு மேல் நான் ஆம்பூர் வந்தேன். 27.06.2015 அன்று தான் நான் புகார் கொடுத்தேன். அது அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.2 புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்று நான், ஆம்பூர் காவல் நிலைய காவல் ஆய்வாளரிடம் கேட்டேன். அவர் வழக்கு பதிவு செய்திருப்பதாக கூறினார். நான் முதல் தகவல் அறிக்கை நகல் கேட்கவில்லை. என்னை, பள்ளிகொண்டா காவல் ஆய்வாளர் விசாரிக்கவில்லை. சி.பி.சி.ஐ.டி. போலிசார் மட்டும் விசாரித்தார்கள். 27.06.2015 அன்று பள்ளிகொண்டா காவல் ஆய்வாளர் கோவிந்தசாமி என்னை விசாரிக்கவில்லை. வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை. 1வது எதிரி பள்ளிகொண்டா காவல் நிலையத்தை சேர்ந்தவர். பவித்ரா காணாமல் போன வழக்கு பள்ளிகொண்டா காவல் நிலைய வழக்கு என்றால் சரிதான். 16.06.2015 அன்றும் 17.06.2015 ஆகிய இரண்டு நாட்களும் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் ரவி என்பவர் இருந்தார். அவர் என்னை விசாரித்தார். அவர் எதுவும் விசாரித்தது பற்றி எழுதிக்கொள்ளவில்லை. எனது

சொந்த ஊர் ஆம்பூர். பள்ளிகொண்டா காவல் நிலைய ஆய்வாளர் பெயரை, உதவி ஆய்வாளர் ரவி எனக்கு கூறினார். 2 முதல் 4 எதிரிகளை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் நான் பார்த்துள்ளேன். காவல் நிலையத்தில் இவர்களை தவிர வேறு பலரும் இருந்தார்கள். அவர்களின் பெயர் எனக்கு தெரியவில்லை. நான் ஆம்பூரில் இருந்ததால் இவர்களின் பெயர் எனக்குத் தெரியும். 2 முதல் 4 எதிரிகள் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் வேலை பார்க்கவில்லை என்றாலும், உதவி ஆய்வாளர் ரவி சொன்னதின் பேரில் நான் அவர்கள் பெயரை கூறினேன் என்று சொன்னாலும் சரியல்ல. உதவி ஆய்வாளர் ரவி, 1வது எதிரியின் பெயரை மட்டும் கூறினார். அ.சா.ஆ.2ல் அவ்வாறு ரவி கூறியதாக நான் கூறவில்லை. அ.சா.ஆ.2ல், 2 முதல் 4 எதிரிகளின் பெயர் இல்லை என்றால் சரிதான். அதன் காரணமாக எதிரிகளின் பெயர்கள் எனக்கு தெரியாது என்றாலும், உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. 16.06.2015 முதல் 18.06.2015 வரையில் எதிரிகள் யாரும் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இல்லை என்றாலும், நான் அவர்கள் இருந்ததாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. அவர்கள் இருந்திருந்தால் நான் எனது புகாரில் கூறியிருப்பேன் என்று சொன்னாலும் சரியல்ல. 18.06.2015 அன்று பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு நாங்கள் சென்று பார்த்தபோது ஷமில் பாஷா அங்கு இல்லை என்பதை அ.சா.ஆ.2ல் சொல்லவில்லை. 18.06.2015 அன்று ஷமில் பாஷா, பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருந்தார் என்றாலும், நான் வேண்டும் என்றே குற்றம் சுமத்துவதற்காக அவர் அங்கு இல்லை என்று கூறுகிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 அடங்கிய ஸ்டேட்மெண்ட்டில் உள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. அ.சா.ஆ.3

மற்றும் அ.சா.ஆ.4 அடங்கிய ஸ்டேட்மெண்ட் பின்னிட்டு ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. 27.06.2015 அன்று பள்ளிகொண்டா காவல் ஆய்வாளர் கோவிந்தசாமி, என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றாலும், அந்த வாக்கமூலத்தை நீதிமன்றத்திலும், சி.பி.சி.ஐ.டி.யிலும் கொடுத்துள்ளார் என்று சொன்னாலும் சரியல்ல. 26.06.2015 அன்று ஷமில் பாஷா இறந்து போன காரணம் பற்றி நான், மருத்துவரிடம் கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை. 16.06.2015 முதல் 18.06.2015 வரையில் எதிரிகள் சிறப்பு வேலையாக வெளியில் இருந்ததார்கள் என்றாலும், நான் உண்மைக்கு புறம்பாக அவர்கள் காவல் நிலையத்தில் இருந்ததாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஷமில் பாஷாவை, 1வது எதிரி வெளியே அழைத்துச் சென்றார் என்று எனக்கு பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் கூறினார்கள். யார் கூறினார்கள் என்று எனக்கு குறிப்பாக தெரியாது. என்னிடம் யாரும் அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.